8.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

STC. No.2524/2021

PROSECUTION WITNESS P.W.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரகாஷ் | Caste | : | |
| Father's Name | : | குப்புசாமி | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

2 ம் எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜர் இல்லை.1 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 24.10.2024

C.M.P. No.12046/24 மனு 14.10.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் 1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) விபத்து நடந்த இடத்திற்கு அருகில் தான் நான் பைக் பட்டறை வைத்துள்ளேன் என்றால் ஆமாம். 2 ம் எதிரி சாமியப்பனை தெரியுமா என்றால் தெரியும், பழக்கம். 2 ம் எதிரி சாமியப்பன் விபத்து நடந்தவுடன் என்னிடம் வந்து ஒரு மணி நேரம் கழித்து பைக்கை சரிசெய்ய சொன்னார் என்றால் சரிதான். அதை நான் சரிசெய்து கொடுக்கவில்லை என்றால் ஆமாம். விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதியுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும், படம் வரைந்தார்கள். போலீசார் வரைந்து எழுதிக் கொடுத்த பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம். விபத்துக்கும் 1 ம் எதிரிக்கும் சம்பவம் இல்லை என்றாலும், நான் சம்பவ இடத்தில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

7.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

STC. No.2524/2021

PROSECUTION WITNESS P.W.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சக்திவேல் | Caste | : | |
| Father's Name | : | நடராஜ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

2 ம் எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜர் இல்லை.1 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 24.10.2024

C.M.P. No.12046/24 மனு 14.10.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் 1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) விபத்து நடந்த அன்று நான் அங்கு நின்று கொண்டிருந்தேனா, நடந்து வந்து கொண்டிருந்தேனா என்றால் பைக் பட்டறையில் இருந்து நடந்து வந்து கொண்டிருந்தேன். 2 ம் எதிரி சாமியப்பன் எங்கு நின்று கொண்டிருந்தார் என்றால் பூங்கா அருகில் சிறிய சந்து இருந்தது. அந்த சந்தில் வண்டியை கிராஸ் செய்வதற்காக நின்று கொண்டிருந்தார். எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி செல்வதற்காக நின்று கொண்டிருந்தார் என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்வதற்காக நின்று கொண்டிருந்தார். பைக் பட்டறை முன்பு தான் விபத்து நடந்ததா என்றால் பூங்காவுக்கு எதிரில் நடந்தது.

2) நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது நண்பர் என்பதால் விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து கொடுத்த புகாருக்கு ஆதரவாக சம்பவ இடத்தில் இல்லாமல் சம்பவ இடத்தில் இருந்ததாக மாற்றி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 ம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

6.DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

STC. No.2524/2021

PROSECUTION WITNESS P.W.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | லட்சுமணன் | Caste | : | |
| Father's Name | : | தங்கராஜ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

2 ம் எதிரி ஆஜர். 1 ம் எதிரி ஆஜர் இல்லை. 1 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 24.10.2024

C.M.P. No.12046/24 மனு 14.10.2024 ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் 1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) இரண்டு வண்டிகள் மோதிக் கொண்டதை நான் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை ஒரு வண்டி தான் என் மேல் மோதியது. விபத்து 18.12.2021 அன்று நடந்ததா என்றால் ஆமாம். அன்று நான் சுய நினைவுடன் தான் இருந்தேனா என்றால் ஆமாம். அன்று மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் மறுநாள் 19.12.2021 அன்று விசாரித்தார்கள். 19.12.2021 அன்று நான் புகார் கொடுக்காமல் கலந்து பேசி விட்டு சொல்வதாக சொன்னேனா என்றால் ஆமாம், ஆனால் பேச்சுவார்த்தை உடன்படவில்லை.

2) 20.12.2021 அன்று போலீசார் விசாரித்து புகார் எழுதி வாங்கிக் கொண்டனர் என்றால் ஆமாம். விபத்து ரேஷன் கடைக்கு முன்பு நடந்ததா என்றால் இல்லை. இஸ்திரிக் கடைக்கு நடுவில் நடந்தது. அந்த நேரத்தில் கழிவு நீர் கால்வாய்கள் பறித்து போட்டு பழுதாகி இருந்ததா என்றால் இல்லை. சக்திவேல் எனது நண்பர் என்றால் சரிதான். இன்று சாட்சியமளிக்க வந்துள்ளார் என்றால் ஆமாம். 1 ம் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து பொய்யாக இவ்வழக்கில் 1 ம் எதிரியை சேர்த்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் புகாரில் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.